**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 57** நாள்: 24.01.2026

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் ரூபாய் 2.58 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 புதிய மகளிர் உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் வார்டு அலுவலக கட்டடத்தினைத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் ரூபாய் 2.58 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 புதிய மகளிர் உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் வார்டு 198க்கான அலுவலகத்தினையும் திறந்து வைத்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலத்தில், மாநகராட்சியின் மூலதன நிதியில், வார்டு-196, கண்ணகி நகர், 12ஆவது பிரதான சாலையில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக மகளிர் உடற்பயிற்சிக் கூடம், வார்டு-199, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு இ-36 சாலையில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மகளிர் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் வார்டு-194, ஈஞ்சம்பாக்கம், வி.ஜி.பி. லேஅவுட் பார்க்கில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மகளிர் உடற்பயிற்சிக் கூடம் என 3 மகளிர் உடற்பயிற்சிக் கூடங்களை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

இதன் தொடர்ச்சியாக, காரப்பாக்கம் கங்கை அம்மன் கோவில் தெருவில் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 1.33 கோடி மதிப்பீட்டில் வார்டு-198ற்கான அலுவலக கட்டடத்தினைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.க.சங்கர், திருமதி க.விமலா கர்ணா, திரு.லியோ என். சுந்தரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.